REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 10உ வியாழன் (25—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 12உ வெள்ளி (26—11—54) [இதழ் 141

## உலகில் விளைந்த நெல் உற்பத்தியின் அளவு

1954 ஆகஸ்ட் முதல் 1955 ஜூலை முடியவுள்ள ஒரு ஆண்டில், உலகில் விளையக்கூடிய நெல் 26,230 கோடி ராத்தலாக இருக்கும். இது, சென்ற ஆண்டின் விளைவைவிட இரண்டு சதவிகிதம் குறைவு. பெரும்பாலும் இதற்குக் காரணம், ஆசிய நாடுகளின் இந்த ஆண்டு விளைவுக் குறைவேயாகும்.

உலகின் மற்றப் பகுதிகளில் அமோக விளைவு எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் நெல் விளைவு சென்ற ஆண்டைவிட 60 கோடி ராத்தல் அதிகம்; மொத்தம் இந்த ஆண்டின் நெல் விளைவு அமெரிக்காவில் 620 கோடி ராத்தலாகும்.

# சர். சி. பி. அய்யருக்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம்

## சென்னை கவர்னர் பிரகாசாவே எதிர்ப்புக்கு அடிப்படை

காசி பல்கலைக் கழகத் துணைவேந்தராக உள்ள டாக்டர் சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் வீட்டிற்கு எதிராக, பல்கலைக் கழக மாணவர்கள் ஒருங்கு திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மேற்படி பல்கலைக் கழக மாணவர் கழகத்தை சென்னை கவர்னர் பிரகாசா துவங்கி வைத்தார். அவர் வருகையின் அறிகுறியாகப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு நாள் விடுமுறை விடவேண்டும் என மாணவர் கழகம் கோரியது.

அக்கோரிக்கையை துணைவேந்தர் ஏற்றுக்கொள்ள மறுத்து, மற்ற கல்லூரி பொறுப்பாளர்களைக் கலந்துகொண்டு தான், தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமெனக் கூறி விட்டார்.

விருந்தினரான பிரகாசாவும், துணைவேந்தரும் கூட்டத்தை விட்டு வெளியேறினதும், கல்லூரி அதிகாரிகளின் பிடிவாதத்திற்கு எதிராக மாணவர்கள் முழக்கமிட்டு, ஆர்ப்பாட்டம் செய்யத் துவங்கினர். அதன் பின்னர், மாணவர்கள் ஊர்வலமாக வந்து, டாக்டர் சி. பி. அய்யர் வீட்டின் முன் கூடிக் கொண்டு நடு இரவுவரை ஆர்ப்பாட்டம் செய்தனர்.

துணைவேந்தரும், மற்றப் பல்கலைக் கழக அதிகாரிகளும் ஒன்று கூடிப் பேசி, காசி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான பிரகாசா அவர்களின் வருகையைச் சிறப்பிக்குமுகத்தான், ஒரு நாள் விடுமுறை விடுவது எனத் தீர்மானித்தனர்.

இந்த முடிவை மாணவர் கழகத் தலைவரிடம் அறிவிப்பதற்கு முன்னதாகவே, சில நூற்றுக்கணக்கான மாணவர்கள், மாணவரல்லாத வேறு பலரையும் சேர்த்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர் என்றும், மேற்படி முடிவை அறிவிக்கத் தெரிந்துகொண்ட பிறகுங்கூட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து செய்தனர் என்றும் பல்கலைக் கழகத்தின் சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

### மாணவர் கடமை

கவர்னர் பிரகாசா கருத்து

"மாணவர்களாகிய உங்களின் முதல் கடமை, அறிவைப் பெருக்கிக்கொள்வதுதான்; உங்களை எதிர்நோக்கியிருக்கின்ற பெரும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள இப்போதே நீங்கள், உங்களை உள்ளத்தாலும், உடலாலும் உறுதியுடையவர்களாகத் தயார் செய்துகொள்ள வேண்டும்; பிறர் கவலைப்பட வேண்டிய பிரச்சினைகளில் நீங்கள் தலையிடுவீர்களேயானால், நீங்கள் பாதை தவறிச் செல்வதாகப் பொருள்படும்,"

என்று, சென்னை கவர்னர் பிரகாசா, காசி இந்து பல்கலைக் கழகத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் சொன்னார்:—

"மொழி, கலாச்சாரம் ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் நிர்ப்பந்தங்களில் மாணவர்கள் தலையிடக்கூடாது. இந்தியா பல மொழிகளையும், பலவகையான கலாச்சாரங்களையும் உடைய ஒரு 'நாடு'. இந்தச் 'சிக்கலை'ப் புரிந்து கொண்டு, ஒவ்வொரு இளைஞரும் செயலாற்ற முயற்சிக்க வேண்டும்."

### யுத்த வீரர்களுக்கு நினைவுச் சின்னம்

சென்ற யுத்தத்தில் ஹாங்காங் தற்காப்பிற்காக மடிந்த காமன் வெல்த் வீரர்களின் நினைவாக, ஹாங்காங்கின் தலைநகரான விக்டோரியாவுக்கு ஏழு மைலுக்கு அப்பால் எழுப்பப்படும் கட்டிடத்தை 1955 பிப்ரவரி இறுதியில் ஹாங்காங் கவர்னர் திறந்துவைப்பார் என்றும், இந்த அரங்கில் 286 இந்திய வீரர்கள் போரிட்டு மரணமெய்தினர் எனவும் சொல்லப்படுகிறது.

## வெடிமருந்து ஏற்றிச்சென்ற ரயில் தாக்கப்பட்டது

### பர்மாவில் கலகக்காரர்களின் தாக்குதல்

ரங்கூன், நவ. 24—

மாந்தலேயிலிருந்து ரங்கூனுக்கு வெடிமருந்துகள் ஏற்றிச் சென்ற ரயில் வண்டி ஒன்றை பர்மிய கலகக்காரர்கள் 'டைனமைட்' மூலம் தாக்கினார்கள் என்று தெரிகிறது.

'கயாக்சி' என்னுமிடத்தில் வண்டி சென்றபோது, 'டைனமைட்' வெடித்தது. உடனே கலகக்காரர்கள் வண்டியின் இரு பக்கங்களிலும் இருந்து வண்டியின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களாம்.

வண்டியில் இருந்த காவல் படையினர் திரும்பச் சுட்டனர் என்றும், கலகக்காரர்கள் ஓடினார்கள் என்றும் தெரிகிறது.

இந்தத் தாக்குதலில் இரண்டு ரயில் போகிகள் தடம் புரண்டன என்று தெரிகிறது.

## இலங்கைத் தோட்டத்தில் 1,500 பேர் வேலைநிறுத்தம்

### 36 நாட்களாக நடைபெற்றும் உடன்பாட்டிற்கு வழியில்லை

### தொழிலாளி ஒருவரை வேலையிலிருந்து நீக்கியதால் மூண்ட வினை!

சிலோன், நவ. 24—

நூவரேலியாவிற்கு அருகில் உள்ள தேயிலைத் தோட்டத்தில், கடந்த 36 நாட்களாக, 1,500 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொழிலாளி ஒருவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டதே வேலைநிறுத்தத்திற்கான மூல காரணமாகும்.

தோட்ட முதலாளிக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள தகராறைத் தீர்த்துவைக்க, தொழில் நீதிமன்றத்தையாவது, கட்டாயப் பஞ்சாயத்துக் குழுவையாவது, தொழில் பிணக்கு சட்டத்தின்கீழ் நியமிக்க வேண்டுமென சிலோன் பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோற்றுப் போய்விட்டது.

பிரஸ்தாப முதலாளி - தொழிலாளர் பிணக்கில் ஒரு முடிவு காண சர்க்கார் தொழில் துறை எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுவிட்டதாகவும், சிக்கலைத் தீர்த்துவைக்க நீதிக் குழு ஒன்றை நியமனம் செய்வதைத் தவிர, வேறு பஞ்சாயத்து முறையை ஏற்படுத்த தொழில் பிணக்கு சட்டம் இடம் கொடுப்பதாக இல்லை என்றும் அரசாங்க சார்பில் கூறப்பட்டது.

அரசாங்க சார்பில் கூறப்படும் தடையைப் போக்கிக் கொள்வது அதிக கஷ்டமானது அல்லவென்றும், மேற்படி பிணக்கை உடனடியாகத் தீர்த்து வைக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும் மற்றொரு உறுப்பினர் குறிப்பிட்டார்.

## ஜவுளி நூல் ஆராய்ச்சி நிலையம்

### ரூ. 40 லட்சம் செலவில் நிறுவப்படும்

கோவையில், ஜவுளி நூல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பது என உத்தேசிக்கப்பட்டுள்ளபடி வரும் ஜனவரி மாதத்தில் அந்த ஆராய்ச்சி நிலையத்திற்கான கால்கோள் விழாவினை நடத்தி வைக்குமாறு பண்டிதநேரு கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாக தென்னிந்திய ஜவுளி நூல் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் கே. சீனிவாசன் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

அந்த ஆராய்ச்சி நிலையம் கட்ட ரூ. 40 லட்சம் செலவாகுமென உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இதுவரை கோவையில் உள்ள ஆலை அரசர்கள் ரூ. 7½ லட்சம் தந்திருப்பதாகவும், சீக்கிரமே அவர்களிடமிருந்து இன்னும் ரூ. 10 லட்சம் வசூலாகுமெனவும் அவர் தெரிவித்ததுடன், ஆலை அரசர்கள் தரும் தொகைக்குச் சமமானதொரு தொகையை இந்தியப் பேரரசு பருத்தி ஜவுளி நிதியிலிருந்து தருவதற்கு ஒப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## உத்திரவு!

நகர சபை நிர்வாகத்திற்கு சம்பந்தமில்லாத பிரரேபணைகளை சபையில் அனுமதிக்கக்கூடாதென நகர சபைத் தலைவர்களை சென்னை சர்க்கார் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பாகிஸ்தான் மத்திய ஆட்சி - அமைப்புக்கு அதிகாரக் கட்டுப்பாடு?

### சர் நூன் கருத்தின் மீது அதிகாரப் பாகுபாடு!

### பிரிட்டன் வழங்கிய சட்டத்தைத் திருத்த ஏற்பாடு!

கராச்சி, நவ. 24—

மேற்கு பாகிஸ்தானில் உள்ள பல மாநிலங்களையும் ஒன்றாக்கி ஒரே ஒரு மாநில ஆட்சியாக உருவாக்க, பாகிஸ்தான் சட்ட நிபுணர்கள் தீவிரமாக முயன்று வருகிறார்கள். அதற்காக, பிரிட்டிஷார் இயற்றிய 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தை, தங்கள் கோரிக்கைக்கு ஒப்பத் திருத்தி அமைக்கவும் முயற்சி நடைபெறுகிறது.

புதிதாக ஏற்படுத்த இருக்கும் மேற்கு பாகிஸ்தான் என்ற ஒரே மாநில ஆட்சி அமைப்புக்கும் பாகிஸ்தான் மத்திய ஆட்சி அமைப்புக்கும் ஒதுக்கப்படும் அதிகார இனங்களில், சிறந்த முடிவுக்கு வருவது என்பது, மிக மிகச் சிக்கலான ஒன்று என மேற்படி நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஒவ்வொரு ஆட்சி அமைப்புக்கும் ஒதுக்கப்படவேண்டிய அதிகாரப் பிரிவினை விஷயத்தில் சர். பெரோஸ்கான் நூன் ஏற்கனவே குறிப்பிட்ட கருத்தினை வெளியிட்டிருந்தார். அக்கருத்தை முன்னாள் பாகிஸ்தான் அரசியல் ஆக்க மன்றம் ஏற்க மறுத்துவிட்டது. ஆனால், இப்பொழுதோ, அவர் கருத்தையே அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆட்சிக்கும் உள்ள அதிகாரத்திற்கு வரம்பு கட்டலாம் என்று அந்த நிபுணர்கள் கருதுகின்றனர் எனத் தெரியவருகிறது.

சில முக்கிய இனங்களுக்கான அதிகாரத்தை மட்டுமே மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்துவிட்டு, மற்ற இனங்கள் அனைத்தையும் மாநிலங்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதுதான் நூனின் கோட்பாடு.

போக்கு-வரத்து, கல்வி, தொழில், விவசாயம் போன்ற இனங்கள் மத்திய சர்க்கார் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இப்பொழுது இருந்து வருகின்றன. இவைகளை மாநிலங்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதுதான் சர். நூன் விருப்பம். இவ்விருப்பத்திற்கு கிழக்கு பாகிஸ்தானிலும் பெருத்த ஆதரவு இருந்துவருவது குறிப்பிடத் தக்கது.

## பலதார மணத்தினால் ஏற்பட்டுள்ள புதிய பிரச்சினை

### சிலோன் குடிமகளை மணந்த முஸ்லிமைக் குடிமகனாகப் பதிவு செய்வதில் தொல்லை

கொழும்பு, நவ. 24—

சிலோன் குடிமக்களாக முஸ்லிம்களைப் பதிவு செய்வதில், வழக்கத்திற்கு மாறான, புதிய பிரச்சினை ஒன்று கிளம்பியுள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் நான்கு மனைவிகள் வரை மணந்து கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கையினாலேயே, இந்தப் புதிய குடிமக்கள் பதிவுப் பிரச்சினை கிளம்பியுள்ளது.

பரம்பரை மூலமோ, பதிவு மூலமோ ஏற்கனவே சிலோன் குடிமகளாக உள்ள ஒருத்தியை மணந்து கொள்ளும் ஒரு முஸ்லீம், தன்னை ஒரு சிலோன் குடிமகனாய்ப் பதிவு செய்துகொள்ள விண்ணப்பித்துக் கொள்ளும் தேதிக்கு முன்னதாக ஓராண்டு காலம் வரையில் அவர் அங்கு தங்கி இருந்திருக்கும்பட்சத்தில், சட்டப்படி சிலோன் குடிமகனாவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அந்தச் சட்டம்,

(4-ம் பக்கம் பார்க்க)

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 25—11—1954 வியாழன்


# ரயில் நிலைய விடுதிகள்

இந்திய ரயில்வே நிலையங்களில் உள்ள பிரயாணிகள் தங்கும் விடுதியில் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளையும் அனுமதிப்பது என்று ரயில்வே அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். இதுவரையில், உயர் வகுப்புப் பிரயாணிகள் மட்டுமே அங்கு அனுமதிக்கப்பட்டார்கள். 'மக்களிடையே உயர்வு-தாழ்வு மனப்பான்மை இருக்கக்கூடாது,' என்ற கொள்கையைப் பின்பற்றி இந்த முடிவு செய்யப்பட்டது என்று கூறப்படுகிறது.

இது ஒரு வகையில் ஒத்துக்கொள்ளக்கூடிய காரணமென்றாலும், 'பணம் கொடுக்கும் பிரயாணிகள் அனைவரையும் அனுமதிப்பது,' என்று செய்யப்பட்டிருக்கும் முடிவிற்கு மற்றொரு காரணமும் கூற முடியும்.

இப்போதெல்லாம் ரயில் நிலையங்களில் உள்ள விடுதிகள் பல, எப்பொழுதும் காலியாகவே இருக்கின்றன. ரயில்வேவிடுதிகளில்கிடைக்கும் வசதிகளைவிட அதிக வசதிகள் கொண்ட விடுதிகள் நகரங்களில் ஏற்பட்டிருக்கின்றன. மேலும், பெரும்பான்மையான நகரங்களில், ரயில்வே நிலையங்களில் உள்ள விடுதிகளுக்கும், அப்பகுதியில் உள்ள தொழில் நிலையங்கள், வர்த்தக நிலையங்களுக்கும் இடையே அதிக தூரம் இருக்கிறது. இதன் காரணமாகப் பலர் ரயில் நிலைய விடுதிகளில் தங்குவதற்கு விரும்புவதில்லை. இதனால் அங்கே கூட்டம் குறைந்து போயிருக்கிறது என்பதை, எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய காரணமாகக் கொள்ளலாம்.

ஆகவே, 'மக்களிடையே பேதம் காட்டுவது கூடாது,' என்பதால்தான் இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறதுஎன்று சொன்னாலும்கூட, 'அவ்விடுதிகளில் அனைவரையும் அனுமதித்தால் வருமானத்தை அதிகரிக்கலாம்,' என்ற எண்ணத்தினாலும் இந்த முடிவு செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறுவதும் பொருந்துமல்லவா?

ஆனால், சர்க்கார் செய்துள்ள புதிய முடிவின் பயன் என்ன என்பதைத்தான் ஆராய வேண்டும். 'மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்வோரில் பெரும்பான்மையினர் ஏழைகள்; அவர்களிடம் ரயில் நிலைய விடுதிகளில் தங்குவதற்குப் போதிய பணம் இருக்கிறதா,' என்று, அதிகாரிகள் ஆலோசித்தார்களோ என்னவோ தெரியவில்லை.

ரயில் நிலைய விடுதிகளில் வசூலிக்கப்படும் வாடகையைவிட இன்னும் குறைந்த வாடகையில், அதிக வசதிகளுடன், நகரங்களில் விடுதிகள் இருக்குமென்றால், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் மட்டுமல்ல, முதல் வகுப்புப் பிரயாணிகளும்கூட அங்கே தங்குவதற்கு விரும்பமாட்டார்கள் என்பதை ரயில்வே அதிகாரிகள் உணர வேண்டும்.

'எல்லோரும் தங்கலாம்,' என்று கூறிவிட்டால் மட்டும் போதாது; இப்போது ரயில் நிலைய விடுதிகளில் விதிக்கப்படும் கட்டணங்களையும் சர்க்கார் குறைக்க வேண்டும்.

ஏழைகளான மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் தகுதிக்கு ஏற்றவாறு கட்டணம் குறைக்கப்பட வேண்டும். அப்போதுதான், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் அங்கே சென்று தங்க முடியும். இப்போது விதிக்கப்படும் கட்டணமே தொடர்ந்து வசூலிக்கப்பட்டால், சர்க்காரின் புதிய உத்தரவால் பயன் ஏதும் இருக்காது.

கட்டணத்தைக் குறைப்பதுடன், அதிக வசதிகளையும் சர்க்கார் செய்து தர முன்வர வேண்டும்.

இவைகளைச் செய்த பின்னர்தான், 'மக்களிடையே பேதம் கூடாது,' என்ற கொள்கையை ரயில்வே நிலைய விடுதிகளில் அமுல் நடத்துவது பொருத்தமாகும்!

---

# ஒத்துழைப்பு வேண்டுமாம்!

"தோட்டத் தொழிலாளர்கள் இந்தியக் குடிமக்கள்; இந்தியாவே அவர்களது தாயகம் என்ற அடிப்படையில் தான் அவர்களுடைய இப்போதைய அந்தஸ்து நிர்ணயமாகி இருந்துவருகிறது," என்று, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, லண்டனில் உள்ள இலங்கைத் தோட்ட முதலாளிகளின் பிரதிநிதிகள் கழகத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

'இலங்கையில் உள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் எல்லாரும் இந்தியர்கள் தான்,' என்று அவர் பேசியிருப்பது, உண்மைக்குப் புறம்பானது என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

'புது டில்லியில், புதிய ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது—புனிதமான ஒப்பந்தம் அது—இனி பயம் கிடையாது—பயன் ஏராளமாகக் கிடைக்கப் போகிறது,' என்று பேசினார்கள்.

இப்போது, கொத்தலாவலை, லண்டனில் பேசியுள்ளதைப் பார்க்கும்போது, இலங்கைத் தோட்டங்களில் இந்தியர்கள் யாரையுமே வேலையில் அமர்த்த அவர் ஒப்புக்கொள்ள மறுக்கிறார் என்பதும், இப்போதுள்ள இந்தியத் தொழிலாளர்கள் அனைவரையும் இந்தியாவிற்கு அனுப்பிவிட்டு, அவர்களிருந்த இடங்களில் இலங்கை மக்களையே—அதாவது, சிங்களவர்களையே நியமிக்கப்போகிறார்கள் என்பதும் புலனாகிறது. தோட்ட முதலாளிகளின் பிரதிநிதிகளிடையே அவர் பேசிய பேச்சு, இதைத்தான் தொனிக்கிறது!

இலங்கையின் தோட்டங்களை வளரச் செய்ய இந்தியர்கள் பயன்பட்டார்கள் என்ற உண்மையை அவர் எடுத்துச் சொல்லிவிட்டு, பின்னர், இலங்கை சர்க்கார், தோட்டத் துறைகளில் இலங்கை மக்களையே வேலைக்கமர்த்த வேண்டுமென்று திட்டம் தீட்டியிருக்கிறதென்றும், இப்போது வேலை செய்வோரை இந்தியாவிற்கு அனுப்பிவிட முடிவு செய்திருக்கிறதென்றும், ஆகவே, இந்த முடிவுக்கு முதலாளிகளின் ஒத்துழைப்பு தேவை என்றும் பேசியிருக்கிறார்.

இதனிடையே, இலங்கை மக்களாக வேண்டுமென்று மனுச் செய்திருப்போரின் கோரிக்கைகள் சாதாரண காரணங்களுக்காக நிராகரிக்கப்படுகின்றன. இப்போது, இலங்கைப் பிரதமர், 'அனைத்தும் இலங்கையர் மயம்' என்ற கொள்கையை அமுல் நடத்தத் தோட்ட முதலாளிகளின் ஒத்துழைப்பைக் கோருகிறார்.

இவற்றைப் பார்க்கும்போது, புது டில்லியில் ஏற்பட்ட நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம் சரிவர அமுல் செய்யப்படுமா என்ற சந்தேகம் வலுக்கிறது. லண்டனில் பேசிய கொத்தலாவலையின் சொற்பொழிவு, நம்பிக்கைத் தருவதாக இல்லை.

# எதிர்ப்பு வெள்ளத்தில் மிதக்கும் ஜப்பான் மந்திரி சபை

## பிரதமர் யோஷிடாவின் கட்சி அலுவலகம் கொளுத்தப்பட்டது

**யோஷிடாவை வீழ்த்த சொந்தக்கட்சியினரும் முஸ்தீபு!**

ஜப்பானிய மக்கள் சபையில் உள்ள, லிபரல் கட்சியில் கருத்து வேறுபாடு கொண்ட கோஷ்டியும்—முற்போக்குக் குழுவினரும் யோஷிடாவின் மந்திரி சபையைத் தோற்கடிக்க, ஒன்றாகக் கூடி புதியதோரு கட்சி காணுவது என முடிவெடுத்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

ஜப்பானியப் பிரதமர் ஷிகெரு யோஷிடா சார்ந்துள்ள லிபரல் கட்சியின் தலைமை அலுவலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது என்று செய்தி வெளியாகியுள்ளது.

ஓமியா நகரத்தைச் சேர்ந்த கொ ஹாச்சி கோஷிமாயி என்ற 45 வயதுடைய ஒருவர், "பிரதமர் யோஷிடாவின் தட்டிக் கழிக்கும் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை; அதனால்தான் அவருடைய கட்சியின் அலுவலகத்தைத் தீயிட்டுக் கொளுத்தினேன்," என்று அவரைக் கைது செய்த போலீசாரிடம் கூறினாராம்.

காலை 6 மணி அளவில் கட்சி அலுவலகத்தில் பெருநெருப்பு கொழுந்து விட்டெரிய ஆரம்பித்ததாம்.

அங்கு பணியாற்றும் இருவர்கள் கட்டிடத்தினுள்ளேயே தங்கியிருந்தமையால் உடனே தீயை அணைத்தனர்; என்றாலும், ஒரு மேஜையும், சில புத்தகங்களும் நெருப்பில் வெந்து சாம்பலாயினவாம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பத்திரிகாலயத்தின் முன் ஒருவர் தோன்றி, "நான் லிபரல் கட்சி தலைமைக் காரியாலயத்திற்குத் தீயிட்டு விட்டேன்," என்று கூறினாராம். பத்திரிகை அலுவலகத்தார் போலீசுக்குத் தகவல் தரவே, அவர்கள் ஓடிவந்து, அந்த மனிதனைக் கைது செய்தனராம்.

அப்போது அவர் கூறினாராம்:- "நானும், இன்னும் எனது சகாக்கள் 30 பேரும் லிபரல் கட்சி அலுவலகத்தைக் கொளுத்த திட்டமிட்டிருந்தோம்; அதன்படி நான் மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டுக் கொளுத்தினேன்; நான் லிபரல் கட்சியை எதிர்ப்பவனல்ல; ஆனால், பிரதமர் யோஷிடாவின் தட்டிக் கழிக்கும் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை."

---

## மண்ணாசை!

**இப்படியும் ஆட்டிப்படைக்கிறது**

கோவாவில் உள்ள கிருத்துவர்கள் பலர் இந்தியாவுடன் நட்புறவு கொள்ள விரும்புவதைக் காணச் சகியாத கோவா சர்க்கார் கிருத்துவ பாதிரியார்களைக் கொண்டு, 'ஒரு வகை'யான பிரச்சாரம் செய்யச் சொல்கிறதாம்.

வெள்ளைக்காரர்கள் 1947-ல் இருந்து 10 ஆண்டுகள் மட்டும் தான் இந்தியாவிற்குச் சுதந்திரம் தந்திருக்கிறார்கள். 1957-ல் பண்டித நேருவின் ஆட்சி மறைந்துவிடும். எனவே, 1957-க்குள் இந்தியா கோவாவைத் தாக்குமானால், லிஸ்பனிலுள்ள போர்த்துகல் சர்க்காருக்கு, இங்கிலாந்து அரசாங்கத்தவர் எல்லா உதவிகளையும் செய்ய வாக்களித்திருக்கின்றனர். அதனால்தான் கோவா மீது இந்தியா தாக்குதலை நடத்த பயந்து சாகிறது, என்றெல்லாம் பாதிரியார்களைக்கொண்டு கிருத்தவர்களிடையே கோவா சர்க்கார் பிரச்சாரம் செய்கிறார்களாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

# ஆந்திராவில் கவர்னராட்சி

## அவசரமான முடிவு; அரசியல் சட்ட நோக்கத்திற்கு முரணானது

## டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி கண்டனம்

புதுடில்லி, நவ. 22—

"ஆந்திராவில் உள்ள சூழ்நிலைகளில் குடியரசுத் தலைவரின் நேரடியான ஆட்சி தேவைதானா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்."

"ஆந்திராவில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சி, மாமூலாக, வழக்கம்போல் நடைபெற வேண்டிய ஒரு காரியம்போலவும், மக்கள்சபை ஆந்திராவில் புகுத்தப்பட்டுள்ள ஜனாதிபதியின் ஆட்சியைப் பற்றி அக்கரைகொள்ளத் தேவையில்லை என்றும் உள்நாட்டு மந்திரி கட்ஜூ கருதுவதாகத் தெரிகிறது."

"குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சிப் பிரகடனம் என்பது மிக முக்கியமான, ஆபத்தானதோரு விஷயமாகும்."

"ஆந்திராவில் ஜனாதிபதியின் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதால், மக்கள் சபையின் பொறுப்பு அதிகரித்துள்ளது. புகுத்தப்பட்டுள்ள ஜனாதிபதியின் ஆட்சி நேர்மையாக நடைபெறுகிறதா என்பதை மக்கள் சபை கண்காணிக்க வேண்டியிருப்பதே அப்பொறுப்பாகும். அந்தப் பொறுப்பினை, இந்த சபை, சரிவரச் செய்ய முடியுமோ என்று நான் ஐயுறுகிறேன்."

"மக்கள் சபைக்கு ஆந்திர நிலைகளைக் கண்காணிக்கிற உரிமை இருப்பினும், நடைமுறையில் ஜனாதிபதியின் பிரகடனத்தால் தனி ஒரு மனிதரிடம் அதிகாரங்கள் எல்லாம் குவிக்கப்படுகின்றன. ஆந்திரப் பிரச்சினைகள் முழுவதையும் நிர்வகிக்கும் அதிகாரம் பெற்றிருக்கும் அவர், தனது அதிகாரங்களை முழுவதும் அமுல் செய்யத்தானே செய்வார். இதனால் அங்குள்ள கவர்னர் ஒரு எதேச்சாரியாக ஆக்கப்படுகிறார்."

—இவ்வாறு, டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, மக்கள் சபையில் ஆந்திர நிலை குறித்து நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஆந்திராவில் ஜனாதிபதியின் ஆட்சியைத் தவிர்த்திருக்க முடியாதா?

"வெளியேறுகிற ஒரு மந்திரி சபைக்கு, சட்ட சபையைக் கலைத்துவிடுமாறு யோசனை கூறும் உரிமை உண்டு.

"ஆனால் சர்வகட்சியினால் அமைக்கப்படுகிற ஒரு 'காபந்து' சர்க்கார் அமைக்க முயற்சித்திருக்கலாமே!

"அத்தகைய ஒரு 'காபந்து' சர்க்காருக்கு கொள்கை உருவாக்கும் அதிகாரம் கிடையாது. அடுத்து நடைபெறவிருக்கும் தேர்தல் முடிவுற்று ஒரு பெரும்பான்மைக் கட்சி மந்திரி சபை அமைக்கும் வரையில், அத்தகைய ஒரு 'காபந்து' சர்க்கார் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்திருந்தால், நல்லதொரு ஜனநாயகப் பண்பு, அரசியல் சட்டத்திற்கு மதிப்புத் தரும் பண்பு வளர ஏதுவாயிருந்திருக்குமே!

"ஆந்திராவில், மந்திரி சபையொன்று இயங்க முடியாத சூழ்நிலை உருவாகியிருந்ததா—ஜனாதிபதியின் நேரடி ஆட்சிப் பிரகடனம் செய்ய—என்பதுதான், நாம் மிகக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

"சட்டசபைக்குக் கட்டுப்படாத மந்திரி சபையொன்று, ஆறு மாதத்திற்கு மேலாக இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டால் தானே, ஜனாதிபதியின் நேரடி ஆட்சிப் பிரகடனத்திற்கான அரசியல் சட்டத்தைத் துணைக்கு அழைக்க முடியும்?

"ஏதேனும் ஒரு கட்சியை மந்திரி சபையமைக்குமாறு அழைக்காவிடினும் பரவாயில்லை; இரண்டு மூன்று மாதங்களுக்கு நிர்வாகத்தை நடத்த பரந்த அடிப்படையில் ஒரு அரசாங்கம் காணக்கூடாதா?

"சகல கட்சியினரையும் கொண்ட ஒரு இடைக்கால 'காபந்து' சர்க்கார் அமைப்பதை தடுத்தது எது? இது சாத்தியமல்ல என்று கருதப்பட்டதா?

**"மிக அவசரப்பட்டு ஆந்திராவில் ஒரு தனி மனிதரின் கையில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன.**

**"இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்கொண்டுள்ள நடவடிக்கை, அரசியல் சட்டத்தின் நோக்கத்திற்கு முரணானதாகும்.**

**"மூன்று மாத காலத்திற்காக இப்படி ஒரு அவசர முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பது, ஜனாதிபதியின் நேரடி ஆட்சி என்பதைக் கேலிக்குரியதாக்கியிருக்கிறது.**

**"நாம், அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கு மதிப்பளிக்கவில்லையானால், அரசியல் சட்டத்திற்கு மதிப்பே இல்லாது போய்விடும் என்று கூற விரும்புகிறேன்."**

# மக்கள் சபையில்....

★

"தெற்கு, மத்திய ஆப்பிரிக்கப் பிரதேசங்களிலுள்ள இந்தியரைத் திருப்பி அழைத்துக் கொள்வது பற்றி இதுவரையிலும் யோசிக்கவில்லை," என்று, மக்கள் சபையில் உதவி வெளி விவகார அமைச்சர் ஏ. கே. நந்தா தெரிவித்திருக்கிறார்.

* * *

"தீண்டாமையை ஒழிப்பதற்காக, பல மாநிலங்களுக்கும், உத்தியோக சார்பற்ற சில நிறுவனங்களுக்கும், சென்ற ஆண்டில், மத்திய சர்க்கார் ரூ. 50 லட்சம் மானியத் தொகையளித்துள்ளது," என்று உதவி உள்நாட்டமைச்சர் பி. என். தத்தர் தெரிவித்திருக்கிறார்.

* * *

மத்திய மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மத்திய சர்க்கார் நிதியமைச்சர் தேஷ்முக், முதல் உலக யுத்தம் முடிவுற்றபின், இந்திய சர்க்கார் யுத்தக் கடனாக 2,27,16,000 பவுனை ஏற்றுக் கொண்டதாகவும், 1928–29-ல் மொத்தம் 59,94,997 பவுன் கொடுத்ததின் பேரில், 1,67,21,003 பவுன்கள் கடன் குறைந்ததாகவும், பர்மா பிரிவினைக்குப்பின், மேலும் இக்கடன் 12,54,075 பவுன்களுக்குக் குறைந்ததாகவும், கடன் நிறுத்தப்பட்ட பிறகு அதற்கு வட்டி கொடுப்பதும் நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

* * *

அசிஸ்டெண்ட் கிரேடுகளில் ஏற்படுகின்ற நிரந்தர காலி இடங்களில் 4-ல் 1 பங்கை குமாஸ்தாக்களுக்காக ஒதுக்கிவைக்க விதி செய்யப்பட்டுள்ளதாக உதவி உள்நாட்டமைச்சர் பி. என். தத்தர் தெரிவித்திருக்கிறார்.

* * *

தொழிற்சாலைக்கு வேண்டிய மாவு உற்பத்தியை, வாழைத் தண்டிலிருந்து இலாபகரமாகச் செய்யும் முறையை மைசூர் மத்திய உணவுத் தொழில் ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துள்ளதென, இயற்கை வசதி உதவி அமைச்சர் கே. டி. மல்லையா அறிவித்திருக்கிறார்.

* * *

ஆண்டொன்றுக்கு 50 லட்சம் பவுண்டன் பேனாக்கள் இந்தியாவுக்குத் தேவையாக இருக்கிறதாகவும், இங்கு மலிவான விலையில் நடுத்தரப் பேனாக்கள் உற்பத்தி செய்யும் திறமை உண்டென்றும், மத்திய வர்த்தக மந்திரி டி. பி. கர்மார்க்கர், மக்கள் சபையில் கூறியுள்ளார்.

* * *

"இந்த நாட்டில், தொழில் நுட்பம் தெரிந்த சிப்பந்திகள் ஒரு சிலரே இருந்தாலும், அண்டை நாட்டினருக்கு உதவுவதே இந்திய சர்க்காரின் கொள்கை," என்று பிரதமர் நேரு, 'சூடானிலிருந்து தொழில் நுட்ப உதவி கோரிக்கை வந்தபோது, அதை சர்க்கார் ஏற்றது ஏன்?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

# 13 அமெரிக்கர்களுக்கு சிறைத் தண்டனை

**'ஒற்றர்கள்' என குற்றச்சாட்டு**

கம்யூனிஸ்டு சீன சர்க்கார், 13 அமெரிக்கர்களை சிறைக்கு அனுப்பியுள்ளது. ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதாம்.

சீனாவின் பாதுகாப்பிற்கு விரோதமாக ஒற்றர் வேலை பார்த்ததற்காக அவர்களை சீன இராணுவ நீதிமன்றம் தண்டித்தது.

இந்த அமெரிக்கர்களுடன் விசாரணை செய்யப்பட்ட 4 சீனர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

மற்றும் நான்கு சீனர்களுக்கு ஆயுள் தண்டனையும், ஒருவருக்கு 15 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

# கழகச் செய்திகள்

## பெத்துநாய்க்கன் பேட்டை தி. மு. கழகம்

20—11—54 மாலை 6 மணிக்கு, சென்னை 8-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்களின் தேர்தல் கூட்டம், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்டவர்கள் கழக நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : சி. ஆர். பாலசுந்தரம் ; துணைச்செயலாளர் : எஸ். சுந்தரம் ; பொருளாளர் : க. பாண்டியன் ; மாவட்ட உறுப்பினர்கள் : சி. ஆர். பாலசுந்தரமும், என். வி. நடராசன் ; செயற்குழு உறுப்பினர்கள் : பே. தா. இன்மொழியன், சி. பன்மொழியன், புட்பரத்தினம், ந. கி. சண்முகம், ஏ. வி. ஆசைத்தம்பி, சிகாமணி, சி. ஆர். பாலசுந்தரம், எஸ் சுந்தரம், கு. தேவராசன், டி. ஆர். கணேசன், வானவரம்பன், ருக்மாங்கதன், ந. ரா. கலைச்செழியன், என். வி. நடராசன், க. பாண்டியன்.

## சென்னை 25-வது வட்ட தி. மு. (கிளை) கழகம்

14—11—54 மாலை 4 மணிக்கு கழகப் பொதுச்குழுக் கூட்டம், சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: த. வெற்றியழகன்; துணைச் செயலாளர்: அ. அண்ணாசாமி; பொருளாளர்: அ. கு. அண்ணாமலை; மாவட்டப் பிரதிநிதிகள்: தி. க. பொன்னுவேல், துரைராசன்; செயற்குழு உறுப்பினர்கள்: மாறவர்மன், முனுசாமி, செங்கையா, ராசேந்திரன், வளர்மதி, தெய்வசிகாமணி, விஜயன்.

## நார்சியார்கோவில் தி. மு. கழகம்

12-11-54 இரவு 8 மணிக்கு, இவ்வூர் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: கோ. இராமசாமி; துணைச் செயலாளர்: பி. என். இராமய்யன்; பொருளாளர்: ம. இராமமூர்த்தி; மாவட்டப் பிரதிநிதி: கு. நாராயணசாமி.

## சென்னை 35-வட்ட தி. மு. கழகம்

21—11—54-ல், சென்னை 35-வது வட்ட தி. மு. கழகக் கிளை சார்பில்தோழர் வில்லவன் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், "இன்றைய சமுதாயம்" என்பது பற்றி தோழர்கள் ச. இளங்கீரன், கிருட்டிணமூர்த்தி, அ. செ. க. துரை, கோ. செங்குட்டுவன், ஜெயராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## சென்னை — மயிலாப்பூர் தி. மு. கழகம்

14—11—54 காலை 10 மணிக்கு தோழர் பி. எம். மதியழகன் தலைமையில் 2, அரங்கநாதபுரம் தெருவில், 'புதுமனை புகு விழா' நடைபெற்றது. மாலை 4 மணிக்கு, நடந்த செயற்குழு கூட்டத்தில், தேசிகவிநாயகம், காஞ்சித் தோழர் அருணாசலம் (ராமு) மறைவுக்கு, அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், தோழர் கே. கந்தசாமி அவர்களை மாவட்டப் பிரதிநிதி, கிளைக் கழக செயற்குழு உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்கி மேற்படி பதவிகளுக்கு தோழர் ஏ. இராதாகிருஷ்ணன் அவர்களைத் தேர்ந்தெடுத்தும், திராவிடர்த் திருநாளை பணிமனையிலேயே நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன், 25–7–54ல் நடந்த பொதுக்கூட்ட வரவு - செலவு படிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

## திருப்புத்தூர் தி. மு. க.

22—11—54 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தேரடித் திடலில், தோழர் பி. இராமையா தலைமையில் ஓர் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, 10 வயதுள்ள மணிமாறன் பேசிய பிறகு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், போலீசாரின் அடக்குமுறையைக் கண்டித்துப் பேசினார்.

பின்னர், இவ்வூர் கழகச் செயலாளர் போலீஸ் அதிகாரியால் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், கல்லக்குடி—தூத்துக்குடியில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பொருளுதவி செய்யுமாறு ஆட்சியாளரைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பம்பாய் தி. மு. கழகம்

**ஐந்தாவது ஆண்டு விழா**

13, 14—11—54 ஆகிய இரு நாட்களிலும், தாராவி வ. உ. சி. நகர மன்றத்திடலில் ச. கணேசன் அரங்கில், பம்பாய் தி. மு. கழக 5-வது ஆண்டு விழா நடைபெற்றது. முதல் நாள் கூட்டம் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் இரா. வளர்மதி அனைவரையும் வரவேற்றுப் பேசியபின், தோழர் பி. எஸ். செல்லையா கழகக் கொடியை ஏற்றுவித்து, கொடியின் இலட்சியம் குறித்துச் சொற்பொழிவாற்றினார். அடுத்து, அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி புராண இதிகாச ஆபாசங்களை குறித்தும், அதனால் மக்களிடையே நிலவிவரும் மூடநம்பிக்கை ஆகியவை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

அவருக்கு பம்பாய் தி. மு. கழகச் சார்பில் கைத்தறித் துண்டு ஒன்றும், சௌந்திர பாண்டியன் பகுத்தறிவு மன்றச் சார்பில் கைத்தறி வேட்டி—துண்டுகளும் அணிவிக்கப்பெற்றன. பின்னர் தோழர் இரா. மா. சண்முகராசன் அவர்கள் நன்றிகூற முதல் நாள் விழா முடிவுற்றது.

மறுநாள் கூட்டம், தோழர் இரா. மா. சண்முகராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சு. வள்ளிநாயகம், உ. அ. செல்லையா ஆகியோர் பேசியதும், அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி அவர்களுக்கு, பம்பாய் மத்திய தி. மு. கழகம், வடவை தமிழறிவு இயக்கம் இராமாநுஜம் புதூர் நாகம்மையார் படிப்பகம், மாதுங்கா தி. மு. கழகம், மற்றும் தோழர்கள் பலராலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. பின்னர் எம். எஸ். இராமசாமி அவர்கள், இன்றைய அரசியல் நிலை குறித்து சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின்னர் தோழர் எஸ். தியாகராசன் நன்றி நவில கூட்டம் முடிந்தது. ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கணியூர் தி. மு. கழகம்

20—11—54ல், தோழர் காளியப்பன் தலைமையில், இவ்வூரில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மதுரை எஸ். முத்து, உடுமலை நாராயண சிக், பொள்ளாச்சி துரைக்கண்ணன் ஆகியோர் பேசினர்.

## காளப்பநாய்க்கன்பட்டி தி. மு. க. (கிளை) திறப்பு விழா

15—11—54 மாலை 5 மணிக்கு தோழர் ஜி. பி. சோமசுந்தரம், இவ்வூர் கழகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ, கழகக் கொடியை ஏற்றிவைத்தார். மாலை 7 மணிக்கு கழகக் கட்டிடத்தி லிருந்து ஊர்வலம் ஒன்று புறப்பட்டுச் சென்று, கூட்டம் மைதானத்தை அடைந்ததும், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., ஏ. ஆனைமுத்து, துத்திக்குளம் தோழர் சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## இராசபாளையம் நகர தி. மு. கழகம்

இந்நகரில் அம்பலபுளி பசாரில் மீண்டும் கொடியேற்றப்பட்டது. ரயில் நிறுத்தப் போராட்டத்தில் மதுரைத் தோழர் கணேசனுடன் ஈடுபட்ட இராசபாளையம் தோழர் ஆர். திராவிடமணிக்கு விதிக்கப்பட்ட 35 நாள் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்டார். ஆனால், மீண்டும் அவர் மீது இப்போது ஜப்தி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. டிசம்பர் மாதத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆலடிக்குமுளை தி. மு. க.

16-11-54 பிற்பகல் 1 மணிக்கு தோழர் மெ. முத்துசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அடுத்த ஆண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: வீ. இராமச்சந்திரன்; துணைச் செயலாளர்: க. குழந்தைவேலு; பொருளாளர்: மெ. முத்துசாமி; மாவட்டப் பிரதிநிதி: வை. இராமசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: வீ. இராமச்சந்திரன், மெ. முத்துசாமி, ந. முத்துசாமி, மெ. தம்பியப்பன், வை. மு. ரெங்கசாமி சே. விஸ்வலிங்கம், வை. செல்லக்கண்ணு, வெ. காசிநாதன், எம். ஆர். முருகையன், வை. இராமசாமி, கோ. முனியப்பன், க. குழந்தைவேலு, வீ. சின்னக்கண்ணு, ச. தங்கராஜு, அபிபுல்லா, வெ. மாப்பிளையன்.

இவ்வாண்டு முடிவிற்குள் கழக முதலாண்டு விழாவை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

## மாயூரம் நகர தி. மு. கழகம்

கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் என். கிட்டப்பா தலைமையில் 21—11—54 இரவு 7 மணிக்கு நடைபெற்றபோது 5—12—54-ல் நகரப் பூங்காவில் ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பம்பாய் தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கம்

11—11—54-ல், பம்பாயிலுள்ள மேற்படி சங்க அலுவலகத்தில் தோழர் தி. க. மாடசாமி தலைமையில் நடைபெற்ற சங்க நிர்வாக உறுப்பினர் கூட்டத்தில், அமைச்சர் ரபி அகமத் கித்வாய், வி. நாடிமுத்து ஆகியவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொண்டு, பின்னர் சென்ற மாத வரவு-செலவு கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்டும், பிரெஞ்சிந்திய சுதந்திர போராட்டம் வெற்றி கண்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தும், சித்தூர் மாவட்டத்திலுள்ள திருத்தணி பஞ்சாயத்துக் குழு ஆந்திர அரசாங்கத்தால் கலைக்கப்பட்டதைக் கண்டித்தும், ஆதிதிராவிட மாணவர்களுக்களிக்கப்படும் 'சர்டிபிக்கேட்டுகளில்' 'ஆதி திராவிடர்' என்றே குறிப்பிட வேண்டுமென்று சென்னை சர்க்கார் கல்வி இலாகாவைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

# வறுமையிலிருந்து விடுதலை

★

**"அரசியல் சித்தாந்தங்களினாலேயே கஷ்டங்கள் வளருவதில்லை; மூடப் பழக்கங்களும், அறியாமையும், விஞ்ஞான—இயந்திர வசதியின்மையுமே வறுமைக்குக் காரணம்; பரந்த கண்ணோட்ட கம்யூனிச வாதத்தினால் விடிவு காண முடியாது; மக்களுடைய அறிவும், பண்பும் மலர்ந்து விடாது; மனித இயல்புடன், மக்களின் உரிமைகளை மதித்து, நவீன வசதிகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலமே சாத்தியமாகும். தொழிலபிவிருத்தியினால் மட்டுமே சபிட்சமேற்பட்டுவிடுமென்பதும் அசாத்தியமே!"**

—இவ்வாறு, "வறுமையிலிருந்து விடுதலை"—என்ற 'தலைப்பில், பி. பி. சி-யில் பேசிய ரிட்சி கால்டர் என்பவர் குறிப்பிட்டார்.

அவருடைய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு :—

"தொழில் துறையில் முன்னேற்றமடைந்த நாடுகள் பிற நாடுகளுக்கு உதவ முடியும் ; ஆனால், தொழில் துறை முன்னேற்றமென்பது, வறுமை ஒழிப்புத் திட்டத்தின் ஓர் அம்சம்தான்.

உணவுத் தொழில்களுக்கான கச்சாப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட வேண்டும். போக்கு-வரத்து வசதிகள், தபால், மின்சக்தி, நீர்ப்பாசனம் எனப் பல வசதிகளிருந்தால்தான் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும்.

ஆனால், சில சமயங்களில், நீரின் பயனைவிட, நீரினால் அழிவு ஏற்பட்டுவிடுகிறது.

உதாரணமாக, இவ்வாண்டில் வட இந்தியாவிலும், கிழக்கிந்தியாவிலும் வெள்ளப்பாழ் ஏற்பட்டுவிட்டது. வெள்ளப் பெருக்கெடுத்தோடும் பிரம்மபுத்திரா நதியை அணையெழுப்பிக் கட்டுப்படுத்திவிட முடியும் என்றும், அதனால் அந்தப் பிரதேசத்தில் நெல்லும், சணலும், புகையிலையும் சாகுபடி செய்து செழிப்புறச் செய்யலாமென்றும் ஐ. நா. நிபுணர்கள் கருதுகிறார்கள்.

**வெள்ளம், பஞ்சம், வரட்சி, பயிர் நோய்கள் — இவை போல விவசாயிகளின் பொருளாதாரத்தைத் தாக்கக் கூடியவை உலக வியாபார நிலையும், விலையுமாகும்!**

உற்பத்தி குறைந்துவிட்டால் விவசாயிகளின் சுபிட்சம் சுருங்கும்; பற்றுக்குறை மிஞ்சும். உற்பத்தி பெருகிவிட்டாலோ, விலைவாசி விழ்ந்து நஷ்டமேற்படும்.

**அமெரிக்க நாடுகளில், இயந்திர வசதியினால் விளைச்சல் பெருகி, தானியத் தேக்கமேற்பட்டாலும், ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள்.**

மக்கள் தொகை பெருகுவதற்கேற்றபடி உணவு உற்பத்தி பெருகவில்லை. மேலும், அண்மையில் தான் பல நாடுகள் சுயாட்சி பெற்றன. அங்கு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தொழில் வளம் பெருக முயற்சிக்கப்படுகிறது. அதற்கேற்ற ஆதார சக்தி வேண்டும்.

**அந்நிய ஆதிக்கம் அப்பகுதிகளிலிருக்கும்போது, அடிமைக்கும், துயரத்திற்கும் ஆளும் வர்க்கத்தின் மீது குற்றஞ்சாட்டுவது சுலபம். சுதந்திர ஆட்சியின் நிலைமை வேறு. பட்டினியும், அறியாமையும் விலகாமல், சுதந்திரம் பெறுவதில், மக்களுடைய அதிருப்தியே மிஞ்சுகிறது.**

# பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

## சம்பளம் தரமாட்டோமென பாங்கி நிர்வாகிகள் மிரட்டல்

வேலை நிறுத்த யோசனையைக் கைவிட வேண்டுமாம்

பம்பாய், நவ. 24—

இந்தியா பூராவும் உள்ள பாங்கி ஊழியர்கள் வரும் டிசம்பர் 10-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளார்களல்லவா?

அவர்கள் அவ்வாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் நாட்களுக்கு பாங்கிகள் சம்பளம் தராது என்று இந்திய பாங்கிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளதாம்.

பாங்கி ஊழியர்கள் 'சட்ட விரோதமா'ன வேலை நிறுத்த முடிவைக் கைவிட்டுவிட வேண்டுமெனவும், சங்கம் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

நீண்ட நாட்களாக நிலவிவரும் பாங்கி தகராறைத் தீர்க்கவும், பாங்கி நிர்வாகிகள் ஊழியர்களிடை சமரசம் ஏற்படச் செய்யவும் ராஜத்தியட்சா குழுவுடன் ஒத்துழைக்கும்படியும் பாங்கி ஊழியரை சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது எனவும் தெரிகிறது.

## 'முகாஜித்'களின் புதிய தலைவர் கைது

தனி முஸ்லீம் நாடு கோருவோர்மீது சர்க்கார் பாய்ச்சல்

பர்மிய முகாஜித் இயக்கத்தின் புதிய தலைவரை பர்மியத் துருப்புகள் சூழ்ந்து கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

இவர்கள், அரக்கானில், முஸ்லிம்களுக்கென தனி நாடு ஒன்றைக் கோருகின்றனர்.

பர்மா—பாகிஸ்தான் எல்லைக்கு 40 மைல் தூரத்தில், பர்மா துருப்புகள் 'மாங்க்டா' அருகில் 40 கலகக்காரர்களையும், அவர்களின் தலைமைக் காரியாலயத்தையும் பிடித்துவிட்டனர் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்ட புதிய தலைவரின் பெயர் தளபதி முகமது உசைன் என்று அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டிருக்கும் 'முகாஜித்'களின் தலைவர் காசீமுக்குப் பின்னர், இவர்தான் 'முகாஜித்'களின் தலைவராம்.

★

## அதிகாரி கைது!

இரங்கூனில், லஞ்ச ஒழிப்புப் போலீசார், யூ-பூ என்ற அதிகாரியைக் கைது செய்தார்கள் என்று தெரிகிறது.

இந்த அதிகாரி அரிசி கிடங்குகள் கட்டும் பொறுப்பில் இருந்து கொண்டு சுமார் ஒரு கோடியே நாற்பது லட்சம் ரூபாய்கள் கையாடியதாகச் சொல்லப்படுகிறது.

## லட்சிய எல்லையை அடைந்துவிட்டார்களாம்!

மக்கள் சபையில் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த விவசாய மந்திரி டாக்டர் பி. தேஷ்முக், "5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் 1955—56-ம் வருட அரிசி உற்பத்தியின் லட்சிய எல்லை 272-லட்சம்; அதில் 1953—54-ல், 271 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகி விட்டது; நவம்பர் 6-ந் தேதியன்று அரிசி கையிருப்பு 14½-லட்சம் டன்னாகும்; வெள்ளத்தால் சர்க்காரின் கையிருப்பிலுள்ள அரிசி எதுவும் அடித்துச் செல்லப் படவில்லை," என்று கூறினார்.

## இறக்குமதி வரி ரத்து

காரைக்கால், நவ. 24—

புதுவை, காரைக்காலில் உள்ள இந்திய சர்க்கார், பிரெஞ்சு சர்க்கார் விதித்துவந்த 3 சதவிகித இறக்குமதி வரியை ரத்து செய்ய முடிவு செய்துள்ளது.

## பலதார மணத்தினுல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அளவு உரிமை வழங்குவதுடன் நின்றுவிடுகிறது.

ஆனால், சிலோன் குடிமகளை மணந்து கொள்வதின் மூலம் தன்னையும் சிலோன் குடிமகனுகப் பதிவு செய்து கொண்ட முஸ்லிம் ஒருவர், இலங்கைக்கு அழைத்துக் கொள்ள விழையும் இந்தியாவில் இருக்கும் ஏனைய மற்ற மனைவிமார்களையும் சிலோன் குடிமக்களாகப் பதிவு செய்ய விண்ணப்பித்துக் கொள்வதை, அந்தச் சட்டம் அனுமதிக்கவில்லை.

மேற்கூறியவாறு, சிலோன் குடிமக்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள இரண்டு முஸ்லிம்கள், தங்கள் இந்திய மனைவிமார்களையும் சிலோன் குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள, அவ்வரசாங்கத்திற்கு விண்ணப்பித்துள்ளார்களாம். இப்பிரச்சினையில் முடிவு காண்பது, சர்க்காருக்கு சுடும் மண்டை இடியாக இருக்கிறதாம்!

## இலங்கை இந்தியர் பிரஜா உரிமை

பெரி சுந்தரம் தீர்மானம் தோல்வி

கொழும்பு, நவ. 24—

இலங்கை மக்கள் சபை (மேல் சபை)யில், இந்தியர் பிரஜா உரிமை பற்றி உரிமைப் பதிவுக் கமிஷனர் அனுப்பிய இரகசிய சுற்றறிக்கைகளின் பலனால் சில்லரைக் காரணங்களுக்காக பலருக்குப் பிரஜா உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டி, அந்த இரகசிய சுற்றறிக்கைகளை சபையில் வெளியிட வேண்டும் என்று தோழர் பெரி சுந்தரம் கொண்டுவந்த தீர்மானம், பெருவாரியான குரல் ஓட்டு மூலம் நிராகரிக்கப்பட்டது என்று தெரிகிறது.

## ரயில் விபத்துக்கள் பற்றிய விவரங்கள்

மக்கள் சபையில் தகவல்

"இந்த வருடம் அக்டோபர் மாதம் முடிய முதல் 10 மாதங்களில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமாக 2,772 இரயில் விபத்துக்கள் ஏற்பட்டன; இந்த விபத்துக்களினால் 231 பேர் கொல்லப்பட்டனர்; 135 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டது; சுமார் ரூ. 26 லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்தன" என்ற தகவலை உதவி ரயில்வே மந்திரி ஓ. வி. அழகேசன், மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலாக அறிவித்தார்.

## வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோருக்கு

அமெரிக்கத் தூதுவர் நன்கொடை

புதுடில்லி, நவ. 24—

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர கால உதவியாக சுமார் 4½ லட்சம் ரூபாய் (1 லட்சம் டாலர்) பெறுமான சல்பர், பெனிசிலின் ஊசி மருந்து போன்ற மருந்துகளை அமெரிக்கத் தூதுவர் ஆலன் இந்தியச் சர்க்காரின் சுகாதார மந்திரியிடம் தந்துள்ளதாகத் தெரிகிறது.

சுகாதார மந்திரி ராஜ்குமாரி அமிர்த் கௌரி இந்தியத் துணைக் கண்ட மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## கழகக் கூட்டங்கள்

★

முள்ளங்குடி
27—11—54 சனி மாலை
தலைவர்: ம. கோ. மணி
பேசுவோர்:
என். வி. நடராசன்
பொ. தருமன்
நா. செல்வதுரை

★

மணவை
திரு. வி. க. திடலில்
27—11—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: மா. இளங்கிரன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
அ. பெ. தருமலிங்கம்
கி. தங்கவேல்
மீ.சு. இளமுருகு பொற்செல்வி

### பாராட்டுக் கூட்டம்

27-11-54 இரவு 9 மணிக்கு, மணவையில், தோழர் சி. வி. எஸ். கோபாலகிருஷ்ணன் இல்லத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில், தோழர்கள் அன்பில் தருமலிங்கம், கி. தங்கவேல் ஆகியோருக்குப் பாராட்டு விருந்து நடைபெறும்.

### குறள் நெறிக் கழகம்

25-11-54 மாலை 6 மணிக்கு, தோழர் வீரன் பட்டறையில் (ஆதம் சாபு தெரு, புளியந்தோட்டை முதலி தோட்டம், இராயபுரம், சென்னை) மேற்படி கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

27-11-54 மாலை 6-30 மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ஆர். வேணுகோபால் தலைமையில், 'வதந்தி' எனும் பொருள் பற்றி தோழர்கள் சம்பந்தன், முத்தரசு, இராவணன், பட்டாபி, கோவிந்தசாமி, வளவன், இராசேந்திரன், பெருமாள் ஆகியோர் பேசுவர்.

### ஆமதாபாத் தி. மு. கழக பொதுக் குழு உறுப்பினர்கட்கு

28-11-54 மாலை 4 மணிக்கு, சாலப்புச் செயலாளர் தோழர் இரா. வைத்திலிங்கம் இல்லத்தில், ஆண்டு விழாக் கணக்குப் பார்ப்பதற்கும், அடுத்த பொங்கல் விழா நடத்துவதற்கும் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

## மண்ணாசை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகையதொரு தப்புப் பிரசாரத்தைச் செய்ய மாட்டோம் என பாதிரிகள் இதுவரை மறுக்கவில்லையாம். மாருக மர்மகோவாவில் உள்ள கிருத்துவ ஆலயத்தைச் சேர்ந்த பாதிரியார் இந்தப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு முன் மாதிரியாக நடந்துகொள்கிருராம்.

★

## அறப்போர் படையின் 'புதிய தாக்குதல்!'

பெல்காம், நவ. 25—

கோவாவில் உள்ள விடுதலை இயக்கம் இன்றையத் தினம் ஒரு புதிய 'தாக்குதலை' நடத்தும் என கோவா தேசியக் காங்கிரஸ் தலைவர் பீட்டர் ஆல்வாரிஸ் தெரிவித்துள்ளார்.

"கோவாவின் சுதந்திரத்திற்காக நடைபெறும் அறப்போரினை தீவிரமாக்குவதற்கு நவ. 25-ந் தேதி குறிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அன்றுதான் 400 ஆண்டுகளுக்கு முன் போர்த்துகீசிய ஆதிக்கம் கோவா மண்ணில் காலூன்றி, கோவா மக்களை அடிமைகளாக்கிக் கொண்டது," என்ற விளக்கத்தையும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் அதிகாரிகள் நியமனம்

ஆந்திர மாநில சட்டசபை மொத்தத் தொகுதிகள் அளவுக்கு தக்க வகையில் 167 அதிகாரிகளை வாக்காளர் பதிவு அதிகாரிகளாக தேர்தல் கமிஷன் நியமித்துள்ளதாகத் தெரிகிறது.

## பத்தினி வேடம்!

ஆந்திராவில் நடைபெறவிருக்கும் தேர்தலைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சி, மற்றெந்தக் கட்சியுடனும், எவ்விதமான கூட்டு ஏற்பாடு செய்து கொள்ளாதென்று திரு. பிரகாசம் தெளிவாகக் கூறினாராம்.

# மைசூர் மின்சாரத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

## டிசம்பரில் 9,600 பேர் ஈடுபடுவர்

மைசூர் சர்க்கார் மின்சார இலாகா ஊழியர்கள், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வருகிற டிசம்பர் 13-ந் தேதி முதல் காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டுமெனக் கோரி, தொழிலாளர் சங்க நிர்வாகக் குழு முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது.

மின்சார இலாகாவில் சுமார் 12,000 சிப்பந்திகள் உள்ளனர். இவர்களில் 9,600 பேர் சங்கத்தில் அங்கத்தினர்கள்.

அங்கத்தினர்களிடையே வாக்கெடுப்பு ஒன்று, கடந்த நவம்பர் 9—13-ந் தேதிகளுக்கிடையே நடைபெற்றபோது, 95 சதவிகித அங்கத்தினர்கள் வேலை நிறுத்தத்திற்குச் சாதகமாக வாக்களித்துள்ளதின் பேரிலேயே, பத்ராவதியில் நடைபெற்ற தொழிலாளர் சங்க நிர்வாகக் குழு, மேற்கண்ட முடிவை தீர்மானமாக்கியுள்ளது.

சங்கம் தெரிவித்திருந்த கோரிக்கைகளுக்கு, சர்க்கார் கடந்த நவம்பர் 6-ல் அனுப்பியுள்ள பதில் திருப்திகரமானதாயில்லை எனவும், பெருவாரியான சிப்பந்திகள் பற்றிய முக்கியமான கோரிக்கைகளை சர்க்கார் ஒருபோதும் பரிசீலிக்கவில்லை எனவும் தீர்மானம் கூறுகிறது.

சம்பள விகிதங்களையும், பஞ்சப்படியையும் திருத்தி அமைக்க வேண்டுமென்பதும், தற்காலிக சிப்பந்திகளின் வேலைகளை உறுதிப்படுத்த வேண்டுமென்பதும் சங்கத்தின் கோரிக்கைகளில் முக்கியமானவையாகும்.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் மைசூர் மாநிலம் முழுவதும் மின்சார விநியோகம் தடைப்பட்டு விடுமே என்று சர்க்கார் அச்சம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

## ஆரம்பக் கல்வி

டாக்டர் அழகப்பசெட்டியார் தலைமையில் விசாரணைக் குழு நியமனம்

சென்னை, நவ. 24—

சென்னை மாநிலத்தின் ஆரம்பக் கல்வி நிலை பற்றி ஆராயவும் புதியதொரு சிறந்த ஆரம்பக் கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்கித் தரவும் சென்னை அரசாங்கம் டாக்டர் ஆர். எம். அழகப்பச் செட்டியாரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை நியமித்திருப்பதாகத் தெரிகிறது.

குழுவில் இடம் பெற்றுள்ள இதர உறுப்பினர்கள்:—திருவாளர்கள் என். டி. சுந்தரவடிவேலு (கல்வி இலாகா தலைமை அதிகாரி), கே. அருணுசலம் (ராமகிருஷ்ணவித்யாலயா, கோவை) எஸ். மீனாட்சி சுந்தர முதலியார் (தலைமகள் கல்வி நிலையம், ஈரோடு) எம். அருணுசலம் (தலைமையாசிரியர், பி.டி. ஏ. ஏ. உயர்நிலைப்பள்ளி, திருமங்கலம், மதுரை மாவட்டம்) வி. எஸ். கோபால கிருஷ்ண அய்யர் (தலைமையாசிரியர் (சர். எம். சி. டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளி சென்னை) ஆகிய ஐவருமாவர்.

இந்தத் தகவலை நிதிமந்திரி கனம் சுப்பிரமணியம், பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

"இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ள நோக்கமெல்லாம் இந்திய அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளபடி மாநிலத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி தர வழி வகை காணுதல், இன்னும் ஆரம்பப் பள்ளிகளில் தரப்படும் தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்துவதும்தான்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் அரசியல் நெருக்கடி முற்றுகிறது

சீக்கிரமே பொதுத் தேர்தல் நடைபெறலாம்

டோக்கியோ, நவ. 23—

ஜப்பானில் அரசியல் நெருக்கடி முற்றுகிறது எனலாம்.

பிரதமர் யோஷிடாவின் கட்சியான லிபரல் கட்சியிலிருந்து 35 உறுப்பினர்கள், கன்சர்வேடிவ்களுடன் சேர்ந்து கொண்டனர் என்று தெரிகிறது.

'இந்த நிலைமையை ஒட்டி, நான் இராஜினுமா செய்ய வேண்டுமோ,' என்று, யோஷிடா தனது கட்சியினரைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

பிரதமரின் ராஜினுமா பற்றி லிபரல் கட்சி இன்னும் ஒருவிதமான முடிவிற்கும் வரவில்லை என்று தெரிகிறது.

இதற்கிடையில், பிரதமரின் கட்சியிலிருந்து பிரிந்துபோனவர்களும், கன்சர்வேடிவ் கட்சியினரும் முதல் தடவையாகக் கூடிப் பேசினர் என்று தெரிகிறது.

புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கப் படுமென்றும், மேலும் ஏழு லிபரல்கள் வந்து சேருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சோஷலிஸ்டு கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களும், ஜப்பான் ஜனநாயகக் கட்சியினரும் இந்த புதிய கட்சியை ஆரம்பிக்கிருர்கள்.

இடதுசாரிகள்— வலதுசாரிகள் என்று பிளவுபட்டுக் கிடக்கும் சோஷலிஸ்டுகள், பிளவுகளைப் போக்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனராம்.

ஜப்பானில் புதிதாக சீக்கிரமே தேர்தல் நடைபெறுமென்று பலர் நம்புகிருர்கள். ஆகவே, ஆளும் கட்சியின் இரு பிரிவின் தலைவர்களும், தேர்தல் பிரச்சாரம் செய்யும்பொருட்டு மேற்கு ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றனர் என்று தெரிகிறது.

(மற்ற செய்திகளை 2-ம் பக்கம் பார்க்க.)

## உ. பி. முதன் மந்திரி சம்பூர்ணனந்த்?

பண்டித பந்த் மத்திய அரசாங்க மந்திரியாவார்!

உத்தர பிரதேச முதன் மந்திரியாயிருக்கும் பண்டித பந்த், இந்தியப் பேரரசின் மந்திரி சபை திருத்தி அமைக்கப்படுகையில் அதில் சேர்த்துக் கொள்ளப்படலாமென்று தெரிகிறது.

அப்படி அவர் மத்திய மந்திரி சபைக்குச் சென்றுவிட்டால், உத்திர பிரதேச மாநிலத்தின் முதன் மந்திரியாக சம்பூர்ணனந்த் தேர்ந்தெடுக்கப்படக்கூடுமெனத் தெரிகிறது.

சம்பூர்ணனந்த் உத்திர பிரதேசத்தில் கல்வி மந்திரியாயிருந்திருக்கிருர். இப்போது உள்நாட்டு மந்திரியாகவும், தொழிலாளர் இலாக்கா மந்திரியாகவும் இருந்து வருகிருர்.

ஆந்திர பிரஜா கட்சித் தலைவரும் பிரகாசம் மந்திரி சபையில் நிதி மந்திரியாயிருந்தவருமான தென்னெட்டி விஸ்வநாதம், காங்கிரசில் தான், மீண்டும்சேரப்போவதில்லை என திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.